



மதுரை கிழக்குத் தொகுதி திமுக சார்பில் இரண்டு நாட்கள் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு விழா முன்னேற்பாடு பணிகளை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# மணிப்பூர் முதல்வர் பைரன் சிங் ராஜினாமா!

இம்பால், பிப்.10

மணிப்பூரில் முதல்வர் பைரன்சிங் தலைமையிலான பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், மணிப்பூர் முதல்வர் பைரன் சிங் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். தனது ராஜினாமா கடிதத்தை இம்பாலில் உள்ள ராஜ்பவனில் ஆளுநர் அஜய் குமார் பல்லாவிடம் பைரன் சிங் வழங்கியுள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் கடந்த 2023 இல் குக்கி மெய்தேய் இங்குளுக்குக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தால் 200 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பெண் ஒருவர் நிர்வாணமாக ஊர்வலம் அழைத்துச் செல்லப்பட்ட வீடியோ வெளியாகி நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

பெண்கள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்டனர். பலர் வீடுகளை இழந்து முகாம்களில் தஞ்சம் அடைந்தனர். இடையில் சற்று ஓய்ந்த கலவரம் ஆயுதமேந்திய போராட்ட குழுக்களால் கடந்த வருட இறுதியில் மீண்டும் தீவிரமடைந்தது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் கடத்தி கொல்லப்பட்டனர். வீடுகள் தீக்கிரையாகின. இந்நிலையில் மாநிலத்தில் நடந்த கலவரத்துக்கு ஆளும் பாஜக முதல்வர் பைரன் சிங்கிற்கு தொடர்பு உள்ளதாக சர்ச்சை எழுந்தது. இதுதொடர்பாக ஆடியோ பதிவுகள் வெளியாகின.

இவை சித்தரிக்கப்பட்டவை என ஆளும் பாஜக அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் போராட்டக் குழுக்கள் இதை ஏற்க மறுத்ததால் கடந்த வருட இறுதியில் மீண்டும் கலவரம் மூண்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

ஆடியோ பதிவுகளை முன்வைத்து சுதந்திரமான விசாரணை நடத்தக்கோரி குக்கி அமைப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு சஞ்சீவ் கண்ணா, சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, குற்றம்சாட்டப்பட்ட முதல்வர் பைரன் சிங் உரையாடல் அடங்கிய ஆடியோ டேப்புகளை ஆய்வு செய்து அதுகுறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, மத்திய தடயவியல் ஆய்வகததிற்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், வழக்கு விசாரணையை மார்ச் 24 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மணிப்பூர் கலவரத்திற்கு பாஜக முதல்வர் பைரன் சிங்கிற்கு தொடர்பு உள்ளதாக ஆடியோ பதிவுகள் வெளியான நிலையில், தனது முதல்வர் பதவியை பைரன் சிங் ராஜினாமா செய்துள்ளார்.




சென்னை, ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நேற்றுமுன்தினம் (08.02.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த விரிவான ஆலோசனை கூட்டம் அனைத்து துறை உயர் அலுவலர்களுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி. ஆர். பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர், காவல் கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) கபில் குமார் சரத்கர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் பி.என். ஸ்ரீதர், வி.க.நகர் மண்டலக் கண்காணிப்பு அலுவலர் ப.கணேசன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, காவல் இணை ஆணையர் (வடக்கு) எம்.மனோகர், துணை ஆணையாளர்கள் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், (பணிகள்) சிவ கிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், வி.க.நகர் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதியில் 71 ‘அ’ 74 – 74 ‘அ’ ஆகிய வட்டங்களில்

# பி.எல்.ஏ. 2 - பி.எல்.சி. ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

சென்னை,பிப்.10-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு. வி.க. நகர் வடக்கு பகுதி சந்திரயோகி சமாதி சாலை உள்ள சமூக நலக்கூட வளாகத்திலும் மற்றும் பெரம்பூர் நெடுஞ்சாலை எண் 64 என்ற முகவரியில் நடைபெற்ற 74 74அ 71 அ ஆகிய வட்டங்களை சார்ந்த பி எல் ஏ 2, பிஎல்சிகளுக்கான ஆலோசனை கூட்டத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி. கே சேகர் பாபு பி.எல்.ஏ 2 மற்றும் பி.எல்.சி.களுக்கு எப்படி செயல்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன். சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி தொகுதி பார்வையாளர் என் கிருஷ்ணமூர்த்தி பகுதி கழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன், பகுதி துணைச் செயலாளர் ஆர். ராஜன், வட்டக் கழக செயலாளர் எஸ். புஷ்பராஜ், ஜி கிருஷ்ணகுமார், மா.ருத்ரமூர்த்தி மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள் ,வட்டக் கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ., பி.எல்.சி க்கள் திரளாக பங்கேற்றனர்.



### சென்னை – பெரியார் நகர் அரசு மருத்துவமனைக்கு

# மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ. 84.17 கோடி நிதி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, பிப்.10-

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பெரியார் நகர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ.84.17 கோடி நிதியை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு வழங்கினார்கள்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி ரூ.213 கோடி செலவில், தரை மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் புதிய கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை, கொளத்தூர், பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் (7.2.2025) அன்று வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெரியார் நகர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக சி.எம்.டி.ஏ. நிதியிலிருந்து ரூ.84.17 கோடி நிதியை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு வழங்கினார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

சென்னை, கொளத்தூர், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை 1986 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வந்தது. முதலமைச்சர் அவர்களால் கடந்த 18.05.2021 அன்று 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, 202223 ஆம் ஆண்டு சட்டபேரவை மானியக் கோரிக்கையின்போது, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்துகாய சிகிச்சை பிரிவு, தொற்றாநோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்தவங்கி போன்ற சேவைகள் வழங்கும் வகையில், உலக வங்கி திட்டத்தி ன் கீழ், ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் 3 தளங்களுடன் கூடிய கூடுதல் கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அமைக்கும் பணி, முதலமைச்சர் அவர்களால் 08.03.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மேலும் பல உயர்சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பிரத்தியேக இருதயவியல் சிகிச்சை பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய 4,5,6 தளங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டு ரூ.54.82 கோடி செலவில் 07.03.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் 860 படுக்கை வசதிகள் உள்ளது. இம்மருத்துவமனைக்கு கூடுதலாக 102 மருத்துவர்கள், 236 செவிலியர்கள், 79 மருத்துவம் சாரா பணியாளர்கள், 20 அமைச்சுப் பணியாளர்கள், 126 பன்னோக்கு மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் 240 தூய்மை பணியாளர்கள் என மொத்தம் 803 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

மேலும் இப்புதிய மருத்துவமனை கட்டிடத்தில் வரவிருக்கும் உயர் சிறப்பு சிகிச்சை துறைகள் மற்றும் வசதிகள் : இருதயவியல், விரிவாக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, மாற்றுத்திறனாளிகள் சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, எம்.ஆர்.ஐ முழு உடல் பரிசோதனை, மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நல பிரிவு, விரி வாக்கப்பட்ட இரத்த சுத்திகரிப்பு மையம், நரம்பியல், புற்றுநோயியல், சிறுநீரக சிகிச்சை, இரத்த நாள சிகிச்சை, குடல் மற்றும் இரைப்பை நோயியல், ஒட்டுறுப்பு சிகிச்சை என பல உயர்தர சிறப்பு சிகிச்சையின் மூலம் ஒவ்வொரு நாளும் சுமார் 600 உள்நோயாளிகளும், 5000 க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகளும் பயன் பெறுவர்.

இப்புதிய மருத்துவமனை கட்டிடத்தில் வரவிருக்கும் இதர வசதிகள் : குளிரூட்டப்பட்ட தனிஅறைகள் மற்றும் அதிநவீன வசதிகளுடைய தனி அறைகள், 5 அதிநவீன மின்தூக்கிகள், மத்திய நுண்கிருமி நீக்கி நிலையம், நவீன சலவையகம், மத்திய மருந்தகம், மத்திய ஆய்வகம், உதவி மையம், வழிகாட்டி தகவல் பலகை, சிற்றுண்டி யகம், காத்திருப்பு அறை, 24 மணிநேர தூய்மை பணி, கண்காணிப்பு கேமராக்கள், தீயணைப்பு சாதனங்கள், 24/7 மின்சாரம் மற்றும் ஜெனரேட்டர் வசதி, 24/7 மருத்துவ திரவ ஆக்ஸிஜன், 108 ஆம்புலன்ஸ்வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மருத்துவக் கழிவு பராமரிப்பு, ஊட்டச்சத்து மற்றும் உணவு முறையியல்.

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நிகராக அனைத்து வசதிகளுடன் செயல்பட உள்ளதால், நோயாளிகளை உயர்சிகிச்சைக்காக மற்ற மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்வது குறையும். இதனால் நோயாளிகளின் கால விரயம் மற்றும் அலைச்சல் குறைவதுடன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் பணிச்சுமையும் குறைகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி ரூ.213 கோடி செலவில், தரை மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் புதிய கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மேலாண்மை இயக்குநர் அரவிந்த், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மருத்துவக் கல்வி இயக்கக சிறப்பு அலுவலர் டாக்டர் எம்.ரமேஷ், மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் கே.ஹேமலதா, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாள் விழா கொண்டாடுவது குறித்து

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு.!

திருவள்ளூர், பிப். 10 -

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 12-02-2025 அன்று புதன்கிழமை மாலை 04 மணி அளவில் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள ஆர்.எம். கெஸ்ட் ஹவுஸில் மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன். எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்பு உரையாற்றுகிறார்.

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் மார்ச் 01 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு தொடர் நிகழ்ச்சிகள் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசகர் தெரிவித்துள்ளார்.

### கே.ஏழுமலை தலைமை! 132வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி தந்தை

# ந.மோகனரங்கம் படத்திறப்பு நிகழ்வு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கின்றனர்!

சென்னை, பிப்.10



தியாகராயர் நகர் 132வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளியின் தந்தையும், 116-வது வட்ட முன்னாள் துணைச் செயலாளருமான மறைந்த ந.மோகனரங்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 11.2.2025 - செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை, கோடம்பாக்கம், காமராஜர் காலனி 2-வது தெருவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு தியாகராயர் நகர் மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை தலைமை வகிக்கிறார்.

எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு.சத்யா, கோ.சு. மணி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, சா.தேவராசு, கார்த்திகா பாஸ்கர் எம். சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அன்னாரின் திருவுருவப் படத்தை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்டப் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், 132-வது வட்டக் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு151,பாகம் 6 மற்றும் 7 ஆகிய பகுதிகளில் உள்ளடங்கிய ஏரியா சபைக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதி ஆர். சேகர்,151வது வட்ட கழக அவைத் தலைவர் செ.இராமையா,ஏரியா சபை உறுப்பினர்கள் கி.முரளி,என். துரை,ஏ. செந்தில்குமார்,ப.மணிகண்டன், கிரிஸ்டி ஃபெர்ணான்டோ,ஏ.பிரசாந்த், எல்.சங்கர் கணேஷ், உதவி பொறியாளர்கள்,சுகாதாரத் துறை அலுவலர், உள்ளிட்ட 151வது வார்டின் மின்,துப்புறவு மற்றும் தூய்மை உள்ளிட்ட துறைகளின் அரசுத் துறை அதிகாரிகள்,நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைளை எடுத்துரைத்தனர்.,

### ரெயின்போ இன்டர்நேஷனல் எஜுகேர் நடத்தும்

# 1000 பள்ளி மாணவர்கள் பங்கு பெறும் அபாகஸ் வேதிக் கணிதப் போட்டி!

## ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, பிப். 10 -

அகர்வால் வித்யாலயா மற்றும் ஜூனியர் கல்லூரி உடன் இணைந்து ரெயின்போ இன்டர்நேஷனல் எஜுகேர் Accomplish ‘25 (50-70 தொகைகளை 5 நிமிடங்களில் தீர்க்கும்) இன்ட்ராஸ்கூல் ACTMA ABACUS & VEDIC MATHS போட்டி இன்று (10.2.2025) காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆடிட்டோரியம், அகர்வால் வித்யாலயா மற்றும் ஜூனியர் கல்லூரி, 54, ஈவிகே சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 600 082 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

இதில் தி.மு.க., துணை அமைப்பு செயலாளர், தி.ரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, காவல் துறை கண்காணிப்பாளர் (ஓய்வு), டாக்டர்.கலியமூர்த்தி (உலகப் புகழ்பெற்ற ஊக்கமளிக்கும் பேச்சாளர்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நேரடி டெமோ & பரிசு விநியோகம்: மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை

டீம் ரெயின்போ இன்டர்நேஷனல் எஜுகேர் ஸ்ரீதர் துரைராஜன், திருமதி கவிதா ஸ்ரீதர் (நிர்வாகப் பணியாளர்கள் & பாடப் பயிற்சியாளர்கள்), அகர்வால் வித்யாலயா மற்றும் ஜூனியர் கல்லூரி மதுசூதன் (கெம்கா தலைவர்), முராரிலால் சொந்தலியா (நிருபர். உடன் செயலாளர்) ஸ்ரீமதி. சி.விஜய லட்சுமி (அதிபர்) ஆகியோர் பங்கேற்கின்றனர்.



தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் சார்பில் கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் ஆலோசனை கூட்டம் தமிழ்நாடு அரசின் கேபிள் டி.வி. வாரிய தலைவர் தஞ்சை ஜீவா தலைமையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட கேபிள் டி.வி. தனி வட்டாட்சியர் சுகந்தா மற்றும் டி.ஏ, ஏ.டி.ஏ, ஏ.எம். , டி.எஸ்.டி. ஆகியோருடன் நடைபெற்றது மேற்படி ஆலோசனை கூட்டத்தில் பொது மேலாளர் (இயக்கம்) துரை தலைமை அலுவலக துணை மேலாளர் சுரேஷ் உள்ளிட்ட அரசு கேபிள் டி.வி. அலுவலர்களும் கலந்து கொண்டார்கள். ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் கேபிள் டி.வி. வாரிய தலைவர் தஞ்சை ஜீவா சிறப்புரையாற்றினார்.